**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 272 -2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 1 (Complainant) | | | Examined as : PW 1 | |
| Name | : லதா | | Defence | : |
| Father/Husband Name | : செந்தில் | | Court | : |
| Village | : நெய்தவாசல் | | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : 47/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 29.05.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:—**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து காவேரிபூம்பட்டிணம் ஊராட்சியில் பணித்தளப்பொருப்பாளராக பணி செய்து வருகிறேன். நாங்கள் கடந்த 2024ம் ஆண்டு எங்கள் வீட்டை புதிதாக கட்டினோம். கடந்த 05.11.2024 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் காண்கிரீட் போடுவதற்காக எங்கள் வீட்டு ஓரத்தில் காண்கிரீட் மெஷினை நிறுத்தி வைத்திருந்தோம். எதிரி கௌதமன் அப்போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர் திடிரென குடிபோதையில் அருகில் வந்து ரோட்டில் மிஷினை வழிவிடாமல் போட்டுருக்க குச்சிகாரி, தேவடியா என திட்டி கையால் கன்னத்தில் அறைத்துவிட்டார். தடுக்க வந்து எனது மகள் சௌமியாவை எதிரி தேவடியா என திட்டி அவரது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினார். டீ வாங்க சென்றிருந்த எனது கணவர் வந்தவுடன் பூம்புகார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பந்தமாக நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சம்பவ தினத்தன்று காலை 11.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் புகார் கொடுத்தேன். புகாரை

யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் அருகில் இருந்த ஒரு நபர் எழுதினார். அவர் பெயர் தெரியவில்லை. எத்தனை பக்க புகார் என்றால் 1 ½ பக்க புகார் ஆகும். புகார் கொடுத்தற்கு பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

2. நான் BSL காப்பீட்டு நிறுவனத்தில் முகவரா என்றால் முன்பு இருந்தேன். தற்போது இல்லை. அதில் எதிரியின் தாய் தந்தை காப்பீடு எடுத்துள்ளார்களா என்றால் எதிரியின் அம்மா எடுத்திருந்தார். எதிரியின் தாய் எடுத்த காப்பீட்டிற்கான முதிர்வு தொகையை எதிரி கேட்டபோதெல்லாம் காப்பீட்டுநிறுவனம் திவாலாகிவிட்டது என்று தெரிவித்தேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்துவிடுவதாக நிறுவனத்தில் கூறினார்கள். அதன் படி பணம் கொடுப்பதற்கு கால அவகாசம் தான் கேட்டேன். அவ்வாறு காப்பீட்டு பணத்தை கேட்ட போது எனது மகள் எதிரியை பின்புறமாக சென்று தாக்கிவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் காப்பீட்டு தொகை குறித்த பிரச்சனை எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. நானும் எனது மகளும் சேர்ந்து தான் எதிரியிடம் பிரச்சனை செய்துவிட்டு எதிரி எங்களிடம் பிரச்சனை செய்வதாக பொய் புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடமோ எனது மகளிடமோ எந்த காலத்திலும் பிரச்சனை செய்யவில்லை என்றாலும், எதிரியின் மீது உள்ள காப்பீடு தொடர்பாக முன்விரோத்தில் எதிரி மீது பொய் புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 272 -2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 (Victim) | | Examined as : PW 2 | |
| Name | : சௌமியா | Defence | : |
| Father Name | : செந்தில் | Court | : |
| Village | : நெய்தவாசல் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 23/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 29.05.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கல்லூரி படிப்பு படித்து முடித்துள்ளேன். நாங்கள் கடந்த 2024ம் ஆண்டு எங்கள் வீட்டை புதிதாக கட்டினோம். கடந்த 05.11.2024 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் காண்கிரீட் போட்டுக்கொண்டிருந்தோம். காண்கிரீட் போடும் மிஷினானது ரோட்டின் ஓரமாக தான் இருந்தது. சாலையில் வாகனங்கள் செல்வதற்கு போதுமான வசதி செய்யப்பட்டிருந்து. அப்போது ஆஜர் எதிரி அவரது அம்மாவுடன் Scooty ல் வந்தார். ஆஜர் எதிரி வழி இருந்தும் செல்லாமல் வாகனத்தை நிறுத்திவிட்டு எங்கள் வீட்டிற்குள் வந்து எனது அம்மாவிடம் ஏன் வழிவிடாமல் மெஷினை வைத்துள்ளாய் என தேவடியா என திட்டி கையால் கன்னத்தில் அறைந்துவிட்டார். அதை தட்டிகேட்ட என்னையும் தேவடியா என திட்டி தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். எதிரி குடிபோதையில் இருந்ததால் அங்கிருந்தவர்கள் அவரை அங்கிருந்து அழைத்து சென்றுவிட்டார்கள். பின்னர் எனது அப்பாவிற்கு செல்போன் மூலம் தகவல் சொல்லி அவர் வந்ததும் பூம்புகார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் இருந்த தெரிந்த நபர் ஒருவர் எழுதினார். அவர் பெயர் தெரியாது. என் அம்மா முகவராக

பணிபுரிந்த BSL காப்பீட்டு நிறுவனத்தில் எதிரியின் அம்மாவிற்கு காப்பீடு முதிர்வு தொகை கிடைக்காததால் எதிரிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். இது சம்பந்தமாக எதிரியும் எதிரியின் தாயாரும் என் அம்மாவிடம் கேட்டுக்கொண்டிருந்தபோத நான் தான் எதிரியை பின்னால் சென்று தாக்கிவிட்டேன் என்றால் சரியல்ல.

2. எதிரி எங்கள் மீது புகார் கொடுத்துவிடுவார் என்ற பயத்தில் நானும் எனது அம்மாவும் சேர்ந்து எதிரிக்கு எதிராக பொய் புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எப்போது என்றால் சம்பவதன்று மதியம் சுமார் 02.30 மணி இருக்கும்.

3. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 272 -2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 4 (Eye witness) | | Examined as : PW 3 | |
| Name | : தெய்வநாயகம் | Defence | : |
| Father Name | : செல்லையா | Court | : |
| Village | : நெய்தவாசல் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 34/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 29.05.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கம்பி பிட்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.11.2024 அன்று நெய்தவாசல் உள்ள அசா1 லதா வீட்டில் காண்கிரீட் போடுவதற்காக வேலை செய்து கொண்டிருந்தோம். காண்கிரீட் மெஷின் சாலையின் ஓரமாக வாகனங்கள் செல்வதற்கு வழிவிட்டு நிறுத்தியிருந்தோம். அப்போது காலை சுமார் 11.00 மணியளவில் எதிரி கௌதமன் அங்கு வந்து அசா1யிடம் ஏன் ரோட்டில மெஷின போட்டுருக்க என கேட்டார். எல்லாரும் போய்கொண்டு இருக்கிறார்கள். வழிவிட்டு தான் போட்டுருக்கேன் என கூறினார். உடனே எதிரி எப்படிறி ரோட்டில மெஷின நிப்பாட்டுவ குச்சிசாரி தேவடியா என திட்டி கையால் கன்னத்தில் அறைந்துவிட்டார். தட்டி கேட்ட அவரது மகள் அசா2ஐ குச்சிசாரி தேவடியா என திட்டி தலைமுடியை பிடித்து இழுத்து அடித்துவிட்டார். பிறகு சம்பவம் தொடர்பாக அசா1ம் அசா2ம்காவல் நிலையம் சென்று புகார் அளித்தனர். இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்ள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். சம்பவத்தன்று எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் வந்தார். எப்படி வந்தார் என்றால் நடந்து

வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எது என்றால் வீட்டின் உள்ளே ஆகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அசா2 சௌமியா எதிரியை தாக்கினார் என்றால் சரியல்ல. எதிரி அசா2 ஐ அடித்ததாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன். எந்த இடத்தில் அடித்தார் என்றால் அசா2ன் முதுகில் அடித்தார்.

2. சம்பவம் சம்பந்தமாக நான் பிரச்சனையை விலக்கி விட்டேனா என்றால் இல்லை. அசா1 எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் தினத்தன்று நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. அசா1 எனது உறவினர் என்பதால் நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**